




திண்டுக்கல் ஒன்றியம் சிறுமலை அடிவாரத்தில் நடந்த நிகழ்ச்சியில் அமைச்சர் அர. சக்கரபாணி பேசினார். உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஆண்டிஅம்பலம், மாவட்ட கவுன்சிலர் விஜயன், திண்டுக்கல் தெற்கு ஒன்றிய செயலாளர் வெள்ளிமலை மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.

புதுக்கோட்டையில்

# கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை கூட்டம்!

## திருச்சி எழில்மாறன் செல்வேந்திரன் பங்கேற்பு!

புதுக்கோட்டை. செப்.26 -

புதுக்கோட்டை வடக்கு தெற்கு மாவட்ட கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை புதிய நிர்வாகிகள் அறிமுக கூட்டம் மற்றும் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை சிறப்பாக கொண்டாடுவது குறித்த ஆலோசனை கூட்டம் 24.9.2023 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெற்றது.

கூட்டத்தில் கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவையின் மாநில துணைச் செயலாளரும் மத்திய மண்டல பொறுப்பாளருமான எழில்மாறன் செல்வேந்திரன் கலந்து கொண்டு கருத்துறையாற்றி ஆலோசனைகள் வழங்கினார்.

கூட்டத்தில் வடக்கு மாவட்ட துணை தலைவர் கி.சுப்ரமணியன் துணை அமைப்பாளர்கள் பி.டி. ரவி, கந்தர்வகோட்டை முருகையா, இளைய ராஜா, முத்துமுகமது, தெற்கு மாவட்ட தலைவர் சுப.பழனிச்சாமி, துணை தலைவர் பாபுஜான், ஆக்காட்டி ஆறுமுகம், நாகராஜன், சின்னையா, லோகநாதன், பிரகதாம்பாள் ராஜேந்திரன்,நாடிமுத்து, ஆறுமுகம், ராமச்சந்திரன், ரமேஷ், செந்தில்வேலன் ஆகியோர் கலந்து கொண்டனர். வடக்கு மாவட்ட அமைப்பாளர் செந்தாமரைபாலு வரவேற்றார். தெற்கு மாவட்ட அமைப்பாளர் ஆர்.மேகநாதன் நன்றி கூறினார்.

கூட்டத்தில் ஒன்றிய வாரியாகவும் மாவட்ட அளவிலும், பள்ளி மாணவ, மாணவிகளிடையே பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டிகள் நடத்துவதெனவும், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை சிறப்பாக கொண்டாடுவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.



ஆர்க்காடு நகர கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை துணை அமைப்பாளர் சூரியன் பி.ரவி – ரேவதி ஆகியோரின் இல்ல மண விழா வரவேற்பில் அமைச்சர் ஆர்.காந்தி கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார். ஜே.ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ., நகரச் செயலாளர் ஏ.வி.சரவணன், ஏ.வி.சாரதி, ஏ.கே.சுந்தரமூர்த்தி உள்ளிட்ட பல கழக முன்னணியினர் பங்கேற்றனர்.

